

தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (24.10.2024) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 223,வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், எஸ்.ரகுபதி, தங்கம்தென்னரசு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், டி.ஆர்.பி.ராஜா, பி மூர்த்தி ஆகியோர் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள். எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் எஸ்.மாங்குடி , மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

## விருதுநகர் மாவட்டம் –இராஜபாளையம்

# அரசு தலைமை மருத்துவமனையில் பல்நோக்கு கட்டடப் பிரிவுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

விருதுநகர், அக். 25 - விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம்; அரசு தலைமை மருத்துவமனையில்; கட்டப்பட்டு வரும், பல்நோக்கு கட்டடப்பிரிவுகளை தென்காசி நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி ராணி ஸ்ரீகுமார் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 23.10.2024 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் வழங்கப்படும் மருத்துவ வசதிகள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டு முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு, ஏற்கனவே தமிழ்நாடு முழுவதிலும் 19 அரசு தலைமை மருத்துவமனைகள் மட்டுமே இருந்த நிலையில், அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய முக்கிய நகரங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அமைய வேண்டும் என்கின்ற நோக்கில் 25 புதிய மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளை உருவாக்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் ரூ.1018.85 கோடி மதிப்பீட்டில் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ்நாடு முழுவதிலும் 25 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அமையும்; பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

அந்த வகையில் அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு மருத்துவமனைகளும் பல்வேறு புதிய மருத்துவக் கட்டமைப்புகள் என்பது தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்தை பொறுத்தவரை இரண்டு இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அமைய அனுமதி வழங்கப்பட்டது.

அதில் அருப்புக்கோட்டை மற்றும் இராஜபாளையம் மருத்துவமனை கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதில் குறிப்பாக இராஜபாளையம் பகுதியில் சுமார் ரூ.40 கோடி மதிப்பீட்டில் 1.8 ஏக்கர் நிலப்பரப்பில் 227 புதிய படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மேலும், அருப்புக்கோட்டையில் சுமார் ரூ.30 கோடி மதிப்பில் மருத்துவமனை பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும், நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பின்னர், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மருத்துவமனை மேம்படுத்துவதற்கான கருத்துக்கள் மற்றும் குறைகள் தொடர்பான கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், இராஜபாளையம் நகர்மன்ற தலைவர் திருமதி பவித்ரா ஷியாம், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) பாபுஜி, மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியத்தில்

# புலம் பெயரும் தொழிலாளர்களின் பதிவுக் கட்டணத்தை ரத்து செய்வீர்!

## பொன்.குமார் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, அக். 25- தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் உரிமை கூட்டமைப்பின் சார்பில் புலம் பெயர்வோர் பிரச்சினைகள் குறித்த சிறப்பு கூட்டம் சென்னையில் 22.10.2024 அன்று நடைபெற்றது.

கட்சியின் பொதுச்செயலாளர் என்.சுந்தராஜ் தலைமையில், பொதுச் செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன் வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கட்சியின் தலைவர் பொன் குமார் புலம்பெயர்வோர் பிரச்சினைகள் குறித்தும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்று தொழிலாளர்கள் சந்திக்கும் இன்னல்கள் குறித்தும் விளக்கினார். அப்படிப்பட்ட தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களாலும் இந்நாள் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களாலும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறிப்பாக ‘வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்’ அமைக்கப்பட்டு அதன் செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார்.

இந்த நிகழ்ச்சியில் வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேயன் சிவசேனாதிபதி வாரியத்தினுடைய பணிகள் குறித்து விளக்கினார். இந்த நிகழ்ச்சியில் அருணோதயா புலம் பெயர்வோர் அமைப்பு இயக்குனர் டாக்டர்.பெர்னாட் டி.சாமி, வீட்டுப் பணியாளர் தேசிய அமைப்பு ஒருங்கிணைப்பாளர் சகோ.எம்.வளர்மதி, *Jesult Migrants Ministry External (MME) SJ Director* Fr.வேளாங்கண்ணி, *General Global Programme Advisor* பி.பாலமுருகன், தொழிற் சங்கக் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் குரு நாகலிங்கம், *TKTMS* பொதுச் செயலாளர்கள் வி.சுப்பராயலு, ஜெகமுருகன், பொருளாளர் ஆர். சேகர், மாநிலத் துணைத் தலைவர் என்.லட்சுமணன், தலைமை நிலைய செயலாளர் து.ரஜினிராஜ், இணைப் பொதுச் செயலாளர்கள் ஆர்.பானுகோபன், ஜி.பத்மநாபன், எஸ்.இந்துமதி, அமைப்புச் செயலாளர் ஏ.ஜெ.நாகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கீழ்க்கண்ட கோரிக்கைகள் அரசுக்கு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அமைச்சரவையில் ‘வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான ஒரு தனித் துறையை புதிதாக ஏற்படுத்தி, அதற்கு ஒரு அமைச்சரை நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறது.

தலைவர் பொன்குமார் அவர்களின் கோரிக்கையை ஏற்று 2010ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டத்தை அறிவித்தார்கள். ஆட்சி மாற்றத்திற்கு பின் அ.தி.மு.க அரசு கடந்த பத்தாண்டு காலம் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படாமலும், வாரியம் அமைக்கப்படாமலும் முடக்கி வைத்தமைக்கு இந்த கூட்டம் தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியத்தில் புலம்பெயரும் தொழிலாளர்கள் பதிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை ரத்து செய்து விட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



வாரியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து வகையான திட்டங்களும் வாரியத்தில் பதிவு பெற்ற அனைத்து தொழிலாளர்களுக்கும் கிடைத்திடும் வகையில் உரிய நடவடிக்கை எடுத்திட தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

வெளிநாடுகளில் நிரந்தரமாக தங்கி உள்ள தமிழர்கள், வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்று தாயகம் திரும்பக்கூடிய தமிழர்கள் என இருவகை தமிழர்களுக்குமாக இந்த வாரியத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. இதில் புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் தான் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். எனவே இந்த வாரியத்தினுடைய பிரதான செயல்பாடுகள் புலம்பெயர்ந்து வேலைக்கு சென்று தாயகம் திரும்பும் அமைப்புசாராத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

பல்வேறு நாடுகளில் நிரந்தரமாக தங்கி உள்ள தமிழர்கள் மட்டுமே இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். புலம்பெயர்ந்து செல்லும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு அது சார்ந்த பிரதிநிதிகளையும் வாரியத்தில் உறுப்பினர்களாக நியமனம் செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

1983 ஆம் ஆண்டு புலம் பெயர்வோர் சட்டத்தை (Emigration Act) உரிய முறையில் திருத்திட வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை வைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசு இது வரை செவிசாய்க்கவில்லை. எனவே இடைமுகவர்கள் உட்பட அனைவரையும் உள்ளடக்கியதாக முறையான சட்டத்தை உடனடியாக கொண்டு வர ஒன்றிய மோடி அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பாரதிய பிரவேச யோஜனா திட்டத்தில் காப்பீடு செய்யும் தொழிலாளர்களுக்கு இயற்கை இறப்பிற்கு நிதி வழங்கப்படுவதில்லை. வெளிநாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் உச்சகட்ட வெயிலின் காரணமாகவும் அதிக நேரம் வேலை செய்ய நிர்பந்த ப்படுத்தப்படுவதால் ஏற்படும் மன அழுத்தத்தின் காரணமாகவும் பெரும்பாலான தொழிலாளர்கள் மாரடைப்பால் மரணம் அடைந்து விடுகின்றனர். ஆனால் அதை இயற்கை இறப்பாக காட்டப்படுவதால் அந்த குடும்பத்திற்கு நிவாரணம் கிடைப்பதில்லை. எனவே இத்திட்டத்தில் இயற்கையாக இருந்தாலும் நிவாரணம் கிடைப்பதற்கு வழிவகை செய்திட வேண்டுமென ஒன்றிய அரசை இந்த கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு ஓட்டுரிமை அளித்திட வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த வர்களுக்கு தற்போது வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று இந்தியாவில் இருந்தும் புலம்பெயர்ந்து சென்றுள்ள தொழிலாளர்களுக்கு தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை வழங்கிட வேண்டுமென ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறது.

ECR, ECNR என இருவகை பாஸ்போர்ட்டுகளை ஒழித்து எல்லோருக்கும் ஒரே வகையான பாஸ்போர்ட்டுகளை வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## படித்த இளைஞர்களுக்கு உள்ளூரிலேயே

# வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் ‘மினி டைடல்’ பூங்காக்கள்!

## ‘தினத்தந்தி’ நாளேடு பாராட்டு!

சென்னை, அக்.25 - தமிழ்நாட்டில் பரவலாக மினி டைடல் பூங்காக்கள் தொடங்கப்படுவதன் மூலம் அந்தந்த மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் தங்கள் ஊர்களிலேயே வேலை வாய்ப்பை பெற முடியும் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து 24.10.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

“2030ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர், அதாவது ரூ.84 லட்சம் கோடி பொருளாதார வளர்ச்சி கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டுவேன்” என்று சூளுரைத்த முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், அதை செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் 7, 8ந் தேதிகளில் சென்னையில் தொழில் துறை சார்பில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்தினார். இதில் இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், தென்கொரியா நாடுகளை சேர்ந்த தொழில் நிறுவனங்களும் பங்கேற்றன.

இந்த மாநாட்டின் மூலம் மொத்தம் ரூ.6 லட்சத்து 6 ஆயிரத்து 180 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. 14 லட்சத்து 51 ஆயிரத்து 712 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதில், 103 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட நிறுவனங்கள், அதாவது 9 மாதங்களில் 61 சதவீத நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான வேலைகளை தொடங்கிவிட்டதாக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறியுள்ளார்.

அதுபோல, அண்மையில் தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்றிருந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பயணத்தின்போது 11.316 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான ரூ.7.616 கோடி மதிப்பில் 19 நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் முன்னணி



தலையங்கம்
தினத்தந்தி
24.10.2024 (வியாழக்கிழமை)
வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் மினி டைடல் பூங்காக்கள்!

நிறுவனங்கள் என்ற வகையில், பெரும்பான்மையான ஒப்பந்தங்கள் செயல்வடிவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்தான் நிறைய வேலை வாய்ப்புகளை கை நிறைய சம்பளத்துடன் வழங்குகிறது. அந்த நிலையில், கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் டைடல் பூங்காவை சென்னையில் அமைக்க திட்டமிட்டு அதை அப்போதைய பிரதமர் வாஜ்பாயை வைத்து 2001ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந்தேதி தொடங்க ஏற்பாடு செய்தார். அவர் அன்று போட்ட வித்துதான் இன்று விருட்சமாக தமிழ்நாடு முழுவதும் மினி டைடல் பூங்காக்களாக உருவாகிக்கொண்டிருக்கிறது.

கோயம்புத்தார். விழுப்புரம் நகரங்களில் மட்டுமல்லாமல், தூத்துக்குடி. வேலூர், காரைக்குடி. நாமக்கல், திருப்பூர். ஊட்டியிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான வேலைகள் ஜரூராக நடந்து வருகின்றன. இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் கூட கரூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அறிவிப்புகள் வெளியாகின.

கடந்த மாதம் தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார். 55 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் கட்டப்பட்ட மினி டைடல் பூங்காவில் தற்போது 30) சதவீத தள ஒதுக்கிடும், சேலம் மாவட்டம் ஆனைக்கவுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் கிராமத்தில் 55 ஆயிரம் சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட மினி டைடல் பூங்காவில் 71 சதவீத தள ஒதுக்கிடும் வழங்கப்பட்டு அங்கு அலுவலகம் தொடங்கியுள்ள முக்கிய நிறுவனங்களுக்கு தள ஒதுக்கீட்டு ஆணையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இவ்வாறு பரவலாக மினி டைடல் பூங்காக்கள் தொடங்கப்படுவதன் மூலம் அந்தந்த மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் தங்கள் ஊர்களிலேயே வேலைவாய்ப்பை பெற முடியும். தகவல் தொழில்நுட்ப தொழிலில் கேந்திரமாக பெங்களூருவும். அடுத்த இடத்தில் தமிழ்நாடும் இருக்கிறது. விரைவில் அந்த இடத்தையும் எட்டிப்பிடித்துவிடும். மொத்தத்தில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்தில் கொடிகட்டி பறக்கும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் டவுண் திருப்பணி முக்கில் உள்ள திருப்பணி விநாயகர் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ,மாணவிகள் பயன்பெறும் வகையில் பள்ளி தலைமை ஆசிரியர் வேண்டு கோளுக்கிணங்க மின்விசிறிகள் வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று மின்விசிறிகளை வழங்கினார். நிகழ்வில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, வேங்கை வெங்கடேஷ், சுப்பையா, நாதன், கேபிள் குமரேசன், மாரிமுத்து, சிவா, அவதார் ஷாஜகான், பெப்சி சரவணன், செந்தில்குமார், மகாராஜன், பத்மா, சௌந்தரம் முத்துராஜ், ராஜேஸ்வரி உள்பட மாணவ, மாணவியர்கள் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தில், போலி நீதிமன்றமே அய்ந்து ஆண்டுகளாக நடத்தப்பட்டிருக்கிறதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; போலி நீதிமன்றம் நடத்தப்பட்டு, கடந்த ஓராண்டில் மட்டும், 500 வழக்குகளில் தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.**

**‘வாய்மையே வெல்லும்’ என்று வாழ்நாள் முழுதும் பின்பற்றி ஒழுகிய அண்ணல் காந்தி அடிகளார் பிறந்த குஜராத்தில்தான் இப்படி!**

**காந்தி அடிகளாரை இதற்கு மேலும் அவமானப்படுத்த முடியுமா ?**

**‘குஜராத் ஒளிர்கிறது’ - என்று பா.ஜ.க.வினர் பிரச்சாரம் செய்து, அந்த மாநில மக்களை ஏமாற்றி இருக்கிறார்களே !**

**பா.ஜ.க. ஆளும் வேறு சில மாநிலங்களில், போலி அரசு அலுவலகம், போலி டோல்கேட் - போலி வங்கிக் கிளை - என்று போலிகளின் தொடர் நீளுகிறது.**

**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் “ நல்லதுக்குக் காலமில்லே; போலியெல்லாம் போடுதண்ணே கொண்டாட்டம்!”.**